**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.121/2015**

**வழக்கு சாட்சி: PW.17**

**தேதி: 05.08.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **ராமச்சந்திரன்** | **ஜாதி:** | **இந்து-பள்ளன்** |
| **தந்தை பெயர் :** | **பெருமாள்** | **தொழில்:** | **விவசாயம்** |
| **கிராமம்:** | **K.காடனேரி** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **மதுரை** | **வயது:** | **59** |

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் காவல் துறையில் பணியாற்றி சிறப்பு சார்பு ஆய்வாளராக சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் ஓய்வுப் பெற்றுவிட்டேன். 31.07.2012ம் தேதி சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றிய போது நிலையப் பொறுப்பிலிருந்த போது அன்று மதியம் 01.30 மணியளவில் சித்தலூரைச் சேர்ந்த சிங்கமுத்து என்பவரது மகன் முருகேஸ்வரன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி எழுத்துமூலமாக கொடுத்து புகாரைப் பெற்று நிலையக் குற்ற எண். 297/2012ல் இதச சட்டப் பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 302 ன் கீழ் வழக்குப் பதிவு செய்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக நான் பெற்ற புகார் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தது தான். அது **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையை சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்.2-க்கும் மேலதிகாரிகளுக்கும் தலைமைக் காவலர் தனசேகரன் மூலமாக அனுப்பி வைத்தேன். வழக்குக் கோப்பை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் சங்கர் வசம் ஒப்படைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திற்கும் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கும் இடையே சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திற்கும் சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கும்

சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் புகார்தாரருக்கு மருத்துவ நமூனா எதுவும் வழங்கவில்லை. புகார் கொடுத்த நபர் பின்னீட்டு மருத்துவமனைக்கு சென்றதாக மருத்துவ நமூனா எதுவும் என்னிடத்தில் கொண்டு வந்து ஆஜர் செய்யவில்லை. புகாரில் தனது குடும்பம் பாரதி நகரில் வசிப்பதாக புகார்தாரர் குறிப்பிட்டுள்ளார். பாரதி நகருக்கும் சித்தலூருக்கும் சுமார் 8 முதல் 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். புகாரில் அந்த புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றும் யாரால் எழுதப்பட்டது என்ற விபரம் எதுவும் குறிப்பிடவில்லை. காவல் நிலையத்தில் வந்து வாக்குமூலம் கொடுத்தால் அதனை நிலையப் பொறுப்பு அதிகாரி எழுத்து மூலமாக பதிவு செய்ய வேண்டும். புகார்தாரர் என்னிடம் வந்த போது புகார் கொடுக்க வேண்டும் என்று சொன்னார் புகாரை எழுதிக் கொண்டு வரும்படி சொன்னேன். புகாரைப் பெற்று 13.50 மணிக்குள் பதிவு செய்ததாக பதிவு செய்யப்பட்டதாக அ.சா.1ல் குறிப்பு உள்ளது என்றால் 13.30 க்குள் பதிவு செய்துவிட்டேன். அன்று மாலை 06.00 மணிக்கு அது நீதிமன்றத்திற்கு வரப்பெற்றதாக நீதிபதியின் குறிப்பு உள்ளதா என்றால் அவ்வாறு தான் குறிப்பு உள்ளது. (மதியம் 01.30 மணிக்கு புகாரை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டதாக சாட்சி விளக்கம் அளிக்கிறார்). புகார்தாரர் வாக்குமூலமாக என்னிடம் கொடுத்தார் என்றும் அதை நான் பதிவு செய்தேன் என்றும் அதை மறைத்து இந்த வழக்கிற்காக அ.சா.ஆ.1 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல.